| அரையாண்டுத் தேர்வு - 2024 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 3.00 மணி XI - தமிழ் மதிப்பெண் : 90 | |

## பகுதி - 1

*குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* **(14x1=14)**

*2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.*

1. மொழிமுதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டறிக
   அ) அன்னம், கிண்ணம்
   ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், இலட்சாதிபதி
   ஈ) றெக்கை, அங்ஙனம்

2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன
   அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
   இ) இயற்கை உரங்கள்

3. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
   இ) முருகன் ஈ) பாரதியார்

4. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு
   அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி
   ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
   இ) வினைத்தொகை, வினையெச்சம்
   ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

5. **கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.**

| | | |
|---|---|---|
| அ) விரியன் | - | 1) தண்டை |
| ஆ) திருகுமுருகு | - | 2) காலாழி |
| இ) நாங்கூழ்ப்புழு | - | 3) சிலம்பு |
| ஈ) குண்டலப்பூச்சி | - | 4) பாடகம் |

   அ) 3, 4, 2, 1 ஆ) 3, 1, 4, 2
   இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 3, 2

6. 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' - யார் யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர் கவிஞரிடம்
   ஆ) மன்னர் அமைச்சரிடம்
   இ) அமைச்சர் மன்னரிடம்
   ஈ) மன்னன் அமுதவல்லியிடம்

7. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்சொல் எது?
   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
   இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

8. தமிழின் முதல் பா வடிவ நாடகநூல்?
   அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம்
   இ) நூல்தொகை ஈ) சிவகாமியின் சரிதம்

9. 'இன்குலாப்' அவர்களின் இயற்பெயர் யாது?
   அ) அப்துல் ரகுமான் ஆ) சாகுல் ஹமீது
   இ) இரா.மீனாட்சி ஈ) பெ.சுந்தரனார்

Scanned with OKEN Scanner

10.  இந்தக் குறியீடு உணர்த்தும் குறியீட்டுப் பொருள்

அ) வலப்பக்கம் தள்ளவும் ஆ) இடப்பக்கம் தள்ளவும்
இ) ஒற்றை மேற்கோள் குறியீடு ஈ) பத்திகளை இணைக்கவும்

11. புறம், புறப்பாட்டு என வழங்கப்பெறும் நூல் எது?

அ) நற்றிணை ஆ) பதிற்றுப்பத்து
இ) புறநானூறு ஈ) அகநானூறு

12. பன்னிரு திருமுறைகளுள் எட்டாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படுவது?

அ) சின்னச்சீறா ஆ) தேவாரம்
இ) மனோன்மணீயம் ஈ) திருவாசகம்

13. 'மஞ்ஞையும் கொண்டலும்' - என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) எண்ணும்மை ஆ) வினைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) தொழிற்பெயர்

14. "எத்தனை உயரம் இமயமலை - அதில்
இன்னொரு சிகரம் உனது தலை" - அடிகளைப் பாடிய கவிஞர் யார்?

அ) கவிமணி ஆ) பாரதியார்
இ) தாராபாரதி ஈ) பிரமிள்

**பகுதி - 2**

**பிரிவு - 1**

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x2=6)***

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறிந்த கருத்து யாது?

16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாக புறநானூறு கூறுகிறது?

17. மதினா நகரம் ஒரு மாளிகை நகரம் எனும் கூற்றினை உறுதிப்படுத்துக.

18. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

**பிரிவு - 2**

***குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.*** ***(2x2=4)***

19. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிபாட்டு சக்தி மிக்கது ஏன்?

20. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

21. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

**பிரிவு - 3**

***குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக.*** ***(7x2=14)***

***22. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.***

அ) உழுதுழுது
ஆ) பொதுச்சிறப்பு

***23. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.***

அ) அலர்ந்து
ஆ) ஆழ்க

***24. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடராக்குக.***

நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

25. ***வடமொழிச் சொற்களை தமிழாக்குக.***
அ) சங்கீதம்
ஆ) வித்தியா

26. ***வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.***
தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்

27. ***சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.***
தங்கை ***(அல்லது)***
அறிவில்லாதவன்

28. ***கலைச்சொல் தருக.***
அ) Smart phone
ஆ) Sales Tax

29. ***மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.***
அ) எதிர்நீச்சல்
ஆ) மதில் மேல் பூனை

30. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை எடுத்துக்காட்டு தருக.

## பகுதி - 3

### பிரிவு - 1

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

31. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
32. கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது யாது?
33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
34. 'சேரநாடு செல்வ வளம் மிக்கது' - என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் கூறுக.

### பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை எடுத்துக்காட்டுடன் விவரி.
37. 'ப்ரெஸ்கோ ஓவியங்கள்', 'கற்றளி கோயில்கள்' குறித்து எழுதுக.
38. 'தாமஸிகம்' என்றால் என்ன?

### பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x4=12)***

39. அ) "இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் தாழ்த்த இடத்து"
***-இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.***

ஆ) 'உவமை அணியை' சான்றுடன் விளக்குக.

40. ***இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)***

'தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகள் விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ'

***- கம்பர்***



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

41. ***தமிழாக்கம் தருக.***

1) Education is the most powerful weapon which you can use to change the world.

2) The pen is mighter than the sword

3) A picture is worth a thousand words

4) Knowledge rules the world

42. ***புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.***

***(கம்பு, மை, வளை, மதி)***

அ) எலியும் நுழையும், எழிலரசி கையும் நுழையும் _______.

ஆ) அடிக்கவும் செய்யலாம், கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் _______.

இ) கண்ணிலும் எழுதலாம், வெண்தாளிலும் எழுதலாம் _______.

ஈ) அறிவின் பெயரும் அதுதான், அம்புலியின் பெயரும் அதுவேதான் _______.

43. வேர்ச்சொல்லைக் கொண்டு வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலனையும் பெயர் ஆகியவை அமைந்த நான்கு தொடர்கள் எழுதுக. 'பேசு'

## பகுதி - 4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் 2 பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும் .***

***(3x6=18)***

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

***(அல்லது)***

ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. அ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' - என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

***(அல்லது)***

ஆ) "கல்லும் கதை சொல்லும்" - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்குக.

46. அ) 'வாடிவாசல்' கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக.

***(அல்லது)***

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளைத் தொகுத்து எழுதுக.

## பகுதி - 5

47. ***அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.*** ***(4+2=6)***

அ) 'சிற்றூரும் '...... - எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக.

ஆ) 'செயல்' - என முடியும் குறளை எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com